**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 190/2019**

**Dated :27.01.2026**

**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | வயது | : | 25 |
| தந்தை பெயர் | : | முருகேசன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பெருங்களூர் | தொழில் | : | தனியார் மென்பொருள் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

( 1, 2 எதிரிகள் ஆஜர். 3ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து தனியார் மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி லோகேஷ்வரனை எனக்கு தெரியும். நான் சம்பவம் நடைபெற்ற போது, பெருங்களூரில் உள்ள அரசு உயர் நிலைப்பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து வந்தேன். கடந்த 16.07.2018 ஆம் தேதியன்று, நான் பள்ளி முடிந்த பிறகு, பள்ளிக்கு பின்புறம் உள்ள, ஹேண்ட்பால் மைதானத்தில் விளையாடுவதற்காக கோடு போட்டுக்கொண்டிருந்தேன், அப்போது, இளம்பிழையாளி கோடு போடும் கயிற்றை தாண்டினார். நான் அதற்கு அவரிடம் ஏன் கயிற்றை தாண்டுகிறாய் என்று கேட்ட போது, அவர் நான் அப்படி தான் தாண்டுவேன் என்று சொன்னார். எனக்கு பக்கத்தில் இருந்தவர்கள் சத்தம் போட்டவுடன் நானும் இளம்பிழையாளியும் அங்கிருந்து சென்றுவிட்டோம். மறுநாள் 17.07.2018 ஆம் தேதி, பள்ளி முடிந்த பிறகு, பள்ளிக்கு பின்புறம் உள்ள ஹேண்ட்பால் மைதானத்தில் மாலை சுமா ர் 5.00 மணியளவில் நானும் எனது நண்பர்களும் சந்தோஷ், மணிபாரதி, கிருத்திக், சிவக்கிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோர் விளையாடிக் கொண்டிருந்தோம்.

2) அப்போது, இளம்பிழையாளி என்னிடம் வந்து, செல்லமணி, சதிஷ், லோகேஷ் ஆகியோர் பள்ளி மைதானத்திற்கு பின்புறம் வருமாறு சொன்னதாக சொல்லி கூப்பிட்டார். நான் சென்ற போது, இளம்பிழையாளி இவன் தான் நேற்று என்னை கோடு போடும் போது திட்டினான் என்று செல்லமணி, சதிஷ், லோகேஷ் ஆகியோரிடம் சொன்னார். எதிரி செல்லமணி கம்பால் எனது இடது புற மண்டையில் அடித்ததில் அதில் எனக்கு இடது புற கண்புருவத்திற்கு மேலே ஓரத்தில் காயம்

ஏற்பட்டது. பிறகு 1ஆம் எதிரி செல்லமணி என்னை, புண்டை மகனே என்று அசிங்கமாக திட்டினார். அதன் பிறகு எனது நண்பர்கள் சம்பவ இடத்திற்கு வந்த பிறகு செல்லமணி, சதிஷ், லோகேஷ் ஆகியோர் சேர்ந்து கொண்டு, என்னை கையால் கன்னத்திலும் முதுகிலும் அடித்தார்கள். பிறகு அவர்கள் கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு இருசக்கர வாகனத்தில் சென்று விட்டார்கள்.

3) சம்பவத்தில் காயமடைந்த என்னை பெருங்களூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை எனக்கு அளிக்கப்பட்டது. எனது அப்பா சம்பவம் கேள்விப்பட்டு, பெருங்களூர் அரசு மருத்துவமனைக்கு வந்து, என்னை சிகிச்சைக்காக பேருந்து மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்த போது, ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து போலிசார் மருத்துவமனை வந்து, என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள்.
தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) எதிரி செல்லமணி கம்பால் என்னை அடித்ததில், எனக்கு இடது கண்ணில், காயம் ஏற்பட்டு, பார்வை வராது என மருத்துவர்கள் கூறியதால், நான் மதுரையில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு உள்நோயாளியாக 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். எனக்கு முழுவதுமாக இடது கண் நீக்கப்பட்டு, பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டு, செயற்கை கண் பொருத்தப்பட்டுள்ளது. (சாட்சி தனது இடது கண்ணை கையால் தொட்டு காண்பித்து, அது செயற்கை கண் என்பதை காட்டினார். )

5) எதிரிகள் எனது நண்பர்கள் முன்பாக என்னை திட்டியதால், எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது. எதிரிகள் மிரட்டியதால், எனக்கு உயிர்பயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1,2** எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். **எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் ஆஜரில் இருந்தார்கள். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.**

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

ஒப்பம்.**நா.சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**